நாள்: 03.06.2025
OS.135/2017
பெயர் தங்கராஜ்
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்ன தொழில் செய்து வருகிறேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் முன்னால் ராணுவ வீரர் ஆவேன். நானும் வாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். நான் 1984 ல் ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றேன். அன்று முதல் நான் மேலக்கூடலூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன். எனக்கும் வாதிக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது. வாசாஆ 1 புரோநோட்டில் உள்ள சாட்சிகளுக்கும் எனக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது. 13.07.2014 ம் தேதி தமிழரசியும், அவரது கணவர் முருகேசனும் என்னிடம் ரூ.1,00,000 /– கடன் பெறும் போது வாதி உடன் இருந்தாரா என்றால் இல்லை. அசல் வழகககு எண். 94/2017 வழககு புரோநோட்டில் வாதி சாட்சியாக இல்லை என்றால் சரிதான். தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்றுதல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எடுத்துள்ளேன். நான் இந்த நீதிமன்றத்தில் இதுவரை இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். வாதி கூடலூர் பேரூராட்யில் வேலை பார்த்தார். தற்சமயம் பெரியகுளத்தில் வேலை பார்த்து வருகிறார். எந்த ஆண்டு முதல் பெரியகுளத்தில் வேலை பார்த்து வருகிறார் என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற அழைப்பாணையில் உள்ளது எனது கையொப்பம் தான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ளது எனது கையொப்பம் தான். என்னிடம் காட்டப்படும் வழக்கு புரோநோட்டில் உள்ளது என்னுடைய கையொப்பம் அல்ல. நான் புரோநோட்டிலும் எதிர்வழக்குரையிலும் மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் முரண்பட்ட கையொப்பத்தை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு மனிதருடைய வயதைப் பொறுத்து கையொப்பங்கள் மாறும் என்றால் சரியல்ல. ஒரு மனிதருடைய மனநிலையைப் பொறுத்தும் கையொப்பங்கள் மாறும் என்றால் சரியல்ல. ஒரே பேனாவால் எழுதப்பட்ட எழுத்துக்கும், வேறு பேனாவால் எழுதப்பட்ட எழுத்துக்கும் மாறுபாடு ஏற்படும் என்றால் சரியல்ல. நான் காலத்திற்கு தகுந்தாற்போல் என்னுடைய கையொப்பத்தை மாற்றிப் போடும் வழக்கம் உடையவர் என்றால் சரியல்ல. நான் வாசாஆ 1 புரோநோட்டில் கையொப்பம் போட்டுவிட்டு அதை மறுத்து என்னுடைய கையெழுத்து அல்ல என மோசடியாக கட்சி செய்து வருகிறேன்

என்றால் சரியல்ல. கைரேகை நிபுணர் கொடுத்த அறிக்கை முறையான அறிக்கை அல்ல என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.30 ஆயிரம் ஓய்வு ஊதியம் பெற்று வருகிறேன் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சொந்த வீடு, தோட்டம் இருப்பதைக் காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது மகன் என்ன அரசு வேலை பார்த்து வருகிறார், அவருக்கு மாதச் சம்பளம் எவ்வளவு என்பதைக் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவரிடம் எனக்கு கடந்த 6 வருடங்களாக பேச்சு வார்த்தை கிடையாது. வாதிக்கு எனக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு போதுமான பொருளாதார வசதி உடையவர் என்றால் சரியல்ல. அவருக்கு வசதி வாய்ப்பு கிடையாது. வாதி ஜனார்த்தனனுக்கும் அவருடைய அத்தை தமிழரசி, அவரது முருகேசனுக்கும் இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. அவர்கள் நன்றாக பேசிக்கொள்வார்கள். வாதியின் மாமா, அத்தை மீது நான் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றதால் அந்த காழ்ப்புணர்ச்சியில் இந்த வழகைக அவர்களின் தூண்டுதலின் பேரில் வாதி தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. வாசாஆ 1 புரோநோட்டுப்படி வாதியிடம் ரூ.2 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு வழககு புரோநோட்டை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஓம். M.சிவாஜி செல்லையா,

சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.